கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 234/2019

வாதி தரப்பு சாட்சி -1 முத்துலிங்கம் திருமதி.பிரேமா பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 15.10.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முத்துலிங்கம் | கிராமம் | |
| த/பெ / க/பெ. | ஆண்டி | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 50 |

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. எனது பாட்டனார் ராசன் என்றா ல் சரிதான். எனது பாட்டனாருக்கு கன்னியமமாள் மூலமாக ஆண்டி, அழகேசன், இரத்தினகிரி ஆகியோர் மகன்கள் என்றும், செல்லாயி, பிச்சையம்மாள், அமராவதி ஆகியோர் மகள்கள் என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயர் ஆண்டி. தாயார் மருதாயி. எனக்கு உடன்பிறந்தவர்கள் மாரியாயி, வெள்ளையம்மாள், பூஜைமணி, குடியரசு என்றால் சரிதான். எனது பாட்டானாருக்கு கருப்பாயி என்ற மனைவி மூலமாக சீனிவாசன், சந்திரன், பார்வதி, மருதாயி ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். புஸ்பம் என்ற மகள் பிறந்து இறந்துவிட்டார் என்றால் சரிதான். ராசனுக்கு பூர்வீக சொத்துக்கள் உள்ளது. ராசனின் மகன்கள் ஆண்டி, அழகேசன், இரத்தினகிரி ஆகியோர் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். சர்வே எண்.760 ல் 11.01.2005 ம் தேதி நானும், எனது சகோதரர் குடியரசும் சேர்ந்து வேலுசாமி என்பவருக்கு 74 செண்ட் கிரையம் செய்துள்ளோம் என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணத்தின் பதிவு நகல் **பி.சா.ஆ.1** என குறியீடு செய்யப்படுகிறது.

2. 31.08.2004 லேயே 5, 6 பிரதிவாதிகள் மற்றும் 8 ம் வாதி ஆகியோர் சேர்ந்து வேலுசாமிக்கு 70 செண்ட் நிலத்தை விற்றுள்ளார்கள் என்றால் சரிதான். நாங்கள் விற்ற 74 செண்ட் மேற்கு புறமும், 5, 6 பிரதிவாதிகள் மற்றும் 8 வாதி விற்ற நிலம்

கிழக்கு புறமும் உள்ளது என்றால் சரிதான். அந்த நிலத்திற்கும் கிழக்கே வைரப்பெருமாள் நிலம் உள்ளது என்றால் சரிதான். அதற்கும் கிழக்கு சீனிவாசன் மற்றும் சந்திரன் நிலம் உள்ளது என்றால் சரிதான். சீனிவாசன் மற்றும் சந்திரன் அவர்கள் நிலத்தை வேலுசாமிக்கு விற்பதாக சொல்லி பணம் பெற்றுக் கொண்டார்கள். பத்திரம் எழுதி கொடுக்கவில்லை. நான் சொல்வது தவறு என்றும், அவ்வாறு சீனிவாசன், சந்திரன் எந்த தொகையும் பெறவில்லை என்றால் சரியல்ல. எனது தாத்தா ராசன் எனக்கும், எனது சகோதரர் குடியரசுக்கும் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளாரா என்றால் ஆமாம். அதன் சர்வே எண் தெரியுமா என்றால் நியாபகம் இல்லை.

3. எனக்கு செட்டில்மெண்ட் செய்த சொத்திற்கு வடபுறம் எங்களது பூர்விக சொத்துக்கள் தலா 1 ஏக்கர் உள்ளதா என்றால் பொதுவில் உள்ளது. மேற்படி நிலத்தை நாங்கள் அனைவரும் வாய்க்காரராக பிரித்து தலா 1 ஏக்கரை அனுபவித்து வருகிறோமா என்றால் ஆமாம். கிணறிற்கு மேற்குபுறம் எனது தகப்பனார் ஆண்டிக்கும் ,அதற்கு மேற்கு புறம் சீனிவாசனுக்கும் பிரிக்கப்பட்டது. மேற்படி நிலம் எனது தகப்பனார் மற்றும் சீனிவாசன் தனிப்பட்ட முறையில் வாங்கியது. அது தலா 1 ஏக்கர் ஆகும். கிணற்றிற்கு கிழக்கு புறம் பொதுவில் பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து உள்ளது. மேற்படி பூர்வீக சொத்தை வாய்க்காரராக பிரித்து அவரவர் தலா 1 ஏக்கர் அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். அதில் மேற்குபுறம் எனது தகப்பனாரும் அதை ஒட்டி கிழக்கு புறம் இரத்தினகிரி, அதற்கு அடுத்து அழகேசன், அதற்கு அடுத்து சீனிவாசன், அடுத்து சந்திரன் என அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். மேற்படி பிரித்து அனுபவித்து வரும் நிலம் எனது செட்டில்மெண்ட் நிலத்திற்கு வடபுறம் உள்ளது என்றால் சரிதான்.

4. பேரூர் முதல் தோகைமலை செல்லும் ரோட்டிற்கு கிழக்கு புறம் உள்ள 2 ஏக்கர் நிலத்தை சீனிவாசன் தொகுப்பு வீடு கட்டி அனுபவம் செய்த வருகிறார் என்றால் அது பொது நிலமாகும். நான் , எனது சகோதரர் ஊருக்குள் உள்ள நத்தம் நிலத்தில் வீடு கட்டி வசித்து வருகிறோம் என்றால் சரிதான். எனது பாட்டனார் மற்றும் எனது தகப்பனார் ஆண்டி, இரத்தினகிரி, அழகேசன் ஆகியோர் சேர்ந்து சர்வே எண்.782/24 மற்றும் 782/29 நிலங்களை பால்ராஜ் என்பவருக்கு விற்றுள்ளார்கள் என்றால் சரிதான். அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சொத்துக்கள் எனது தகப்பனாருக்கும், இரத்தினகிரிக்கும் ஒதுக்கப்பட்டது என்றும், சீனிவாசன் தொகுப்பு

வீடு ப கட்டி குடியிருக்கும் இடம் அவருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Additional District Munsif,**
**Kulithalai.**